# ஜாமக்காரன்
# JAMAKKARAN

VOLUME - 1 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 6
JUNE 2017 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே!

தேவகிருபையும், சமாதானமும் உங்களுக்குள் எப்போதும் நிலைத்திருப்பதாக.

உங்கள் பிள்ளைகள் இந்த மாதம் புது வகுப்புக்குள் பிரவேசிப்பார்கள் என்று நம்புகிறேன். இப்போதே பிள்ளைகளின் பாதுகாப்புக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். **பள்ளியிலோ, கல்லூரியிலோ** அவர்களுக்கு நல்ல ஆவிக்குரிய நண்பர்களுடன் தொடர்பு உண்டாகட்டும். வகுப்பில் அருகே உட்காருபவர்களும்,தெய்வபயம்உள்ளவர்களாக சேட்டை செய்யாத பிள்ளைகள் நம் பிள்ளைகளுக்கு நண்பர்களாக அமைய ஜெபிப்பது பெற்றோர்களின் கடமையாகும். நானும் உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறேன்.

**சென்னை** போன்ற பெரு நகரங்களில் 4ம் வகுப்பு முதல் 6ம் வகுப்பு பிள்ளைகளை மருந்து கலந்த சாக்லெட்,தின்பண்டங்களை கொடுத்து அந்த சிறுவர்களை கெடுக்கும் கூட்டம் பெருகிவிட்டது. போதை மருந்துக்கு அடிமையான வாலிப பையன்கள் அந்த சின்ன பிள்ளைகளுக்கு மருந்து கலந்த சாக்லெட் அடிக்கடி கொடுத்து போதை மருந்துக்கு அடிமைஆகிவிடுகிறார்கள். சில வாரங்களில் அவர்கள் அந்த சாக்லெட்டுக்கு அடிமை யாகிவிடுகிறார்கள். **சாக்லெட்டை** அந்த சிறுவர்களுக்கு கொடுத்த பையன்கள் அந்த சிறுவர்களை மிரட்டி அவர்கள் வீட்டில்உள்ள **பணம்,நகை,வாட்ச்** போன்ற பொருள்களை **திருடி** எடுத்துக்கொண்டு வந்துகொடுத்தால் நான் தொடர்ந்து உனக்கு சாக்லெட் தருவேன் என்று கூறி பழக்கப்படுத்திவிடுகிறார்கள். வீட்டில் பொருள்கள் எப்படி களவு போகிறது,பாக்கெட்டிலிருந்து பணம் எப்படி களவு போகிறது என்று அந்த பிள்ளைகளின் பெற்றோர் அறியாமல் பல குடும்பங்கள் குழம்பிபோய்விடுகிறது. திருட்டு தொடர்வதாலும், வீட்டிலேயே திருடும் **குற்றவாளியை** கண்டுபிடிக்க முடியாததாலும் ஒரு சில பெற்றோர்கள்

ஜாமக்காரன் JAMAKKARAN

போலீஸ் உதவியை நாடுகிறார்கள். போலீஸ்ஸில் இதற்கென்றே சிறுவர் மனநல படிப்பை படித்த போலீஸ் அதிகாரிகள் உண்டு.(Child Welfare Police Officer) இவர்கள் போலீஸ் உடையில் வராமல் சாதாரண உடையில் வீட்டில் உள்ள சிறுவர்களை விசாரிப்பார்கள். அப்படி விசாரித்ததில் ஏராளமான சிறுவர்கள் அகப்பட்டுள்ளார்கள். அந்த பிள்ளைகளை திருட தூண்டும் போதை மருந்துக்கு அடிமையான **கல்லூரி மாணவர்களையும்** கண்டுபிடித்து விட்டார்கள். அதில் **சென்னையில்** மட்டும் அகப்பட்ட கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம்.

ஒரு சில பெற்றோர்கள் தான் பெற்ற பிள்ளைகளை தன் வீட்டில்உள்ள அவர்களின் 3வது,4வது வகுப்பு படிக்கும் மிக சிறிய பிள்ளைகளின் நடவடிக்கைகளில் சந்தேகப்பட்டு, ஜெபத்துக்காக என்னை அணுகியபோது நான் கூறினேன். இதற்கு ஜெபம் மட்டும் போதாது என்றும், சின்னை பிள்ளைகளை அடித்தோ,மிரட்டியோ,தண்டித்தோ விசாரித்தாலும் அவர்களிட மிருந்து உண்மை அறியமுடியாது. அந்த பிள்கைள் உறங்கும்போது சில வித்தியாசமான மாற்றங்கள் காணப்படும் அதை கண்டுபிடிக்கவேண்டும். அப்படி கண்டுபிடித்தால் **மனநல ஆலோசகர்களிடம்** அழைத்து செல்லுங்கள். அந்த பிள்ளைகள் மருந்து கலந்த **சாக்லெட்** போன்ற இனிப்பு பலகாரங்களுக்கு அடிமைப்பட்டு இருந்தால் அந்த பிள்ளைகளின் தூக்கத்தில் வித்தியாசமான மாற்றம் காணப்படும். அந்த பிள்ளைகளுக்கு குறிப்பிட்ட அந்த சாக்லெட் கிடைப்பதில் தாமதமானாலோ,சிலநாள் அது கிடைக்காமல்போனாலோ அதன் வெளிப்பாடு அவர்கள் கோபத்தில் காண்பிப்பார்கள். தங்களை தாங்களே காயப்படுத்திக்கொள்வார்கள். சிலர் தலையில் அடித்துக்கொண்டு அடம்பிடித்து அழுவார்கள். அவர்கள் அழுகிறார்களே என்று நாம் எத்தனை விலை உயர்ந்த **சாக்லெட்களை** வாங்கி அவர்களுக்கு கொடுத்தாலும் அதை அவர்கள் விரும்பமாட்டார்கள். அவர்கள் ரத்தத்தில் கலந்துள்ள அந்த நச்சு பொருளை இரத்தத்திலிருந்து நீக்கும் வைத்தியம் அவர்களுக்கு தேவைப்படும். இப்போது **மனநல வைத்தியரிடம்** அவர்களை அழைத்து சென்றால் அந்த பிள்ளையை ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் படுக்கவைத்து வைத்தியம் செய்வார்கள். ஒரே வாரத்தில் பிள்ளைகள் சுகமாகிவிடுவார்கள். அதன்பின்தான் மிகவும் ஜாக்கிறதையாக சில ஏற்பாடுகளை பெற்றோர் செய்யவேண்டும். குடியிருக்கும் வீட்டை அல்லது பள்ளிக்கூடத்தை மாற்ற வேண்டியிருக்கும். அந்த மாறுதலை செய்ய தவறினால் மறுபடியும் அந்த பிள்ளை **போதை மருந்துக்கு** அடிமையாகி தங்கள் வாழ்க்கையே கொடுத்துக்கொள்வார்கள். இப்படிப்பட்ட **போதை மருந்துக்கு** அடிமையான பிள்ளைகளை காப்பாற்ற பெற்றோர் பெரிய இழப்பையும், தியாகத்தையும் செய்ய தயாராக வேண்டும்.

முன்பெல்லாம் **கல்லூரி மாணவர்கள்தான்** போதை மருந்துக்கு அடிமையானார்கள். இப்போது அவர்களின் பணதேவைக்காக அவர்கள் புதிதாக கண்டுபிடித்த வழிதான் மிகச்சிறிய வயதுள்ள **சிறார்களை** தங்களுக்கு அடிமையாக்கி அவர்களுக்கு **மருந்து கலந்த சாக்லெட்** கொடுத்து அந்த வாலிபர்கள்அந்த சிறுவனையும் கெடுத்து அவன் குடும்பத்தின் நிம்மதியையும் கெடுக்கிறார்கள். இது பிசாசின் இப்போதைய நவீன திட்டம் ஆகும்.

கர்த்தருடைய பிள்ளைகள் **வாலிப பையன்களுக்கும்**, போதைக்கு அடிமையான வாலிப **பெண் பிள்ளைகளுக்காகவும்** இவர்கள் தாங்கள் **போதை மருந்து வாங்க** பணத்துக்காக

பயன்படுத்தும் வீட்டின் அருகேஉள்ள சிறுவர்,சிறுமிகளை திருட பயன்படுத்துவதால் இவர் களுக்காகவும் உபவாசித்து ஜெபிக்க வேண்டியது எத்தனை அவசியம் என்பது விளங்குகிற தல்லவா!. இதை வாசிக்கும் நீங்கள் உங்கள் குடும்பத்தில் இப்படிபட்ட சம்பவம் உங்கள் பிள்ளைகளுக்கு சம்பவித்தால் மனம் எவ்வளவு வேதனைப்படும். நாம் செல்லமாக வளர்க்கும் சிறு மழலைபிள்ளைகள் **சாக்லெட் போதைக்கு** மருந்துக்கு அடிமையானால் எப்படி துடித்துப்போவீர்கள்!. உங்கள் குடும்ப சந்தோஷம் முழுவதும் நீங்கிப்போகுமே! அதை உணர்ந்து இப்படிப்பட்ட பிள்ளைகளுக்காகவும், பாதிக்கப்பட்ட குடும்பத்துக்காகவும் ஜெபிக்கக்கேட்டுக் கொள்கிறேன். ஆகவே சிறுபிள்ளைகளானாலும் சரி, வாலிபப்பிள்ளைகளானாலும் சரி, அந்த பிள்ளைகளின் பாதுகாப்புக்காக அவர்கள் பள்ளிக்கூடம் அல்லது கல்லூரிக்கு போகும்முன் பெற்றோர் அவர்களை ஜெபித்து அனுப்புங்கள். பிள்ளைகள் சென்ற பின்னும் அவர்களின் பாதுகாப்புக்காக ஒரு சிறு ஜெபம் செய்யுங்கள். கர்த்தர் மனிதர்களை உருவாக்கினதே நாம் **ஆவிக்குரிய சந்ததியை** ஆண்டவருக்கென்று பெற்றெடுக்கத்தான் என்பதை மறக்கவேண்டாம். நானும் ஜெபிக்கிறேன். நீங்களும் ஜெபியுங்கள்.

▬ உங்கள் வாலிபபையன்களுக்கு டூவீலர்(Two Wheeler)**மோட்டார் பைக்** வாங்கி கொடுக்காதீர்கள். வாலிப பிள்ளைகளின் சுபாவமே பைக்கை வேகமாக ஓட்டவேண்டும் என்பதாகும். அதுவும் 2 நண்பர்களை அல்லது 3 நண்பர்களை உட்கார வைத்து பைக் ஓட்டுவதில் அவர்களுக்கு பெருமை. ஆனால் அதுவே அவர்களின் **வாழ்க்கை முடிவுக்கும்** காரணமாகி விடும். உங்கள் பையனை **நீங்களே சாகடிக்கவேண்டாம்.** எத்தனை அன்பு பிள்ளைகள்மேல் இருந்தாலும் மோட்டார் பைக் ஓட்டம் அவர்களின் உயிரோடு விளையாட கூடியதாக அமைந்து விடும். Four Wheelerஅதாவது **கார்** வாங்கி கொடுங்கள். அதிலும் பிரச்சனை உண்டு. ஆனால் ஆபத்து குறைவு. குறிப்பிட்ட வயதுவரும்வரை **இரு சக்கர மோட்டார் பைக்** உங்கள் மகனுக்கு வேண்டாம்.

▬ **10வகுப்பு** தேர்ச்சி பெற்று புதிய வகுப்புக்கு செல்லும் நம் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறேன். அப்படியே **12 வகுப்பு** தேர்ச்சி பெற்ற பிள்ளைகளின் கல்லூரி சேர்க்கைக்காக ஜெபிக்கிறேன். **கல்லூரி** படிக்கும் பிள்ளைகள் மேல்படிப்புக்கு சேரப்போவதற்கும் ஜெபிக்கிறேன். மேலும் **தோற்றுப்போன** பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறேன். அவர்கள் சோர்ந்துபோகாதபடி கர்த்தர் அவர்களை பெலப்படுத்தி **ஞானத்தையும்** படிப்பில் மீண்டும் உற்சாகத்தையும் கொடுத்து **பெற்றோர்களை சந்தோஷப்படுத்தும் பிள்ளைகளாக** கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக. இந்த மாதம் காணிக்கை அனுப்பிய அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். ஜெபிக்க சொன்ன எல்லா கடிதங்களுக்கும் மற்றும் இ-மெயில்களுக்கும் பதில் எழுதிக்கொண்டு இருக்கிறேன். ' **பள்ளி-கல்லூரி** சேர்க்கைக்கு **பணம்** அதிகம் தேவைப்படும், இந்த நெருக்கத்திலும் ஜாமக்காரன் ஊழியத்தில் **பணக்குறைவு** ஏற்படாமல் தொடர்ந்து **பணஉதவி** செய்த அத்தனை வாசக குடும்பங்களுக்கும் நன்றி கூறுகிறேன். இம்மாதம் பிள்ளைகளின் படிப்புக்காக உங்களுக்கு பணம் அதிகம் தேவைப்படும். கர்த்தர் உங்களுக்கு உதவ ஜெபிக்கிறேன். **கர்த்தர்** இந்த மாதம் முழுவதும் உங்களை கண்மணிபோல் காத்து வழி நடத்துவாராக. **ஆமென்.**

**கர்த்தரின் பணியில்**

**டாக்டர்.புஷ்பராஜ்**

# கேள்வி - பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

## இலங்கை கூட்டம் - மிஷனரி பணி

**கேள்வி: இலங்கை 2017 ஏப்ரல் மாதம் GALE FACE என்ற இடத்தில் நடந்த உங்கள் கூட்டம் மிக ஆசீர்வாதமாக இருந்தது. உங்கள் பிரசங்கத்தில் சபைகள் மிஷனரி வேலைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்றீர்கள். இலங்கையில் இந்தியா மாதிரி மிஷனரி பணிக்கு இலங்கையில் ஆதிவாசிகள் இல்லையே? அப்படியானால் வேறு எந்த மாதிரி மிஷனரி ஊழியம் செய்யவேண்டும்.?**

**பதில்:** *இலங்கையிலும் Baticoalo காடுகளில் **வேடாஸ்** என்ற ஆதிவாசிகள் இனம் இருந்தார்களே!, 32 வருடங்களுக்குமுன் அவர்களைப்பற்றி இலங்கையில் உள்ள SUN என்ற ஆங்கில பத்திரிக்கையில் விவரங்களை வாசித்து BATICOALO வில் மரித்துப்போன டாக்டர்.வின்சென்ட் அவர்களின் வீட்டிலிருந்து குழுவாக என்னோடு சிலரை அழைத்துக்கொண்டு காட்டுக்குள் சென்று **முதன்முறையாக ஆதிவாசிகளிடையே** மிஷனரி ஊழியத்தை நான்தான் தொடங்கி வைத்தேன். அதன்பின் இயக்க வீரர்கள் அந்த காடுகளை ஆக்கிரமித்ததால் அதன்பின் ஒருமுறைக்கூட எங்களால் அந்த காட்டுக்குள் போக இயலவில்லை.*

*இலங்கை மக்கள் மிஷனரி ஊழியம் செய்ய இடம் தேடவேண்டாம். ஆனால் சுவிசேஷ ஊழியம் செய்ய நிறைய வாய்ப்புகள் உண்டு. **வவுனியா,யாழ்பாணம்,திரிகோணமலை, நுவரேலியா, மன்னார்** பகுதிகளில் இப்போதுள்ள சுதந்திரமான சூழ்நிலையில் மிக நன்றாக ஊழியம் செய்யலாமே!. தேவையுள்ள மக்கள் இப்பகுதிகளில் மிக அதிகம் உண்டு. அங்கு சென்று சுவிசேஷம் அறிவிப்பவர்கள் சபை ஆரம்பிக்கும் எண்ணம் இல்லாமல் இயேசுவை அறிவிக்கும் ஊழியத்தைமட்டும் செய்யுங்கள். இப்போது அங்கு வீதிக்கு 5 சபைகள் உண்டு. அதுபோதும். சுவிசேஷம் அறிவிப்பவர்களெல்லாம் சபை ஆரம்பித்தால் இலங்கை தாங்காது. மேலே குறிப்பிட்ட இடங்களில் ஏராளமான வியாதியஸ்தர்கள் உண்டு, குடும்ப சூழ்நிலையில் நொருக்கப்பட்டு மனவேதனையுடன் இருப்பவர்களும், வாழ்க்கையில் அனைத்தும் இழந்த மக்களும் அங்கு சிதறி கிடக்கிறார்கள். அவர்களை வீடுவீடாய் சந்தித்து கிறிஸ்துவின் ஆறுதலைப்பற்றி கூறுங்கள். அவர்கள் மனதில் உள்காயம் **ரணமாக** இன்னும் ஆறாமல் கிடக்கிறது. அதற்கு இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மருந்தாக பூசவேண்டாம்! இயேசுவின் இரத்தத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்.*

*இலங்கையில் நடந்த உள்நாட்டு போரில் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் அனாதைகளாக பல்வேறு இடங்களில் **கருணை இல்லங்களில்** சேர்க்கப்பட்டுள்ளதை நான் அறிவேன். இப்போது அவர்கள் வாலிப வயதை அடைந்துவிட்டனர். இந்த குறிப்பிட்ட காலகட்டத்தில்தான் அவர்களுக்கு*

*கிறிஸ்துவேண்டும், அவர்களின் உள்ளத்தில்உள்ள* ***வெறுமை,கசப்பு*** *மாறவேண்டும். தாங்களும் மற்றவர்களைப்போல வாழமுடியாதா?என்ற ஏக்கம் அவர்களுக்குள் நிறைந்து காணப்படுகிறது.*

*இப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ள அவர்களைத்தேடி சென்று அவர்களிடம் கிறிஸ்துவின் ஊழியம் செய்தால் அது தக்கதருணத்தில் அவர்களுக்கு செய்த ஆவிக்குரிய உதவியாக இருக்கும். காரணம் இந்த* ***விடலைப்பருவத்தில் பாவம்*** *செய்ய அவர்களின்* ***சரீர உணர்ச்சிகள் கொப்பளிக்கும்*** *காலகட்டமிது. அந்த உணர்ச்சிகள் வெளிவர துடிக்கும்.*

*இந்த சூழ்நிலையில் அவர்களுக்கு* ***பரிசுத்தம்*** *விதைக்கப்படாவிட்டால் அவர்கள் பாவவழிக்கு சென்றுவிடுவார்கள். இலங்கையில் உள்ள பல ஊழிய ஸ்தாபனங்களும், தனிப்பட்ட பாரமுள்ள* ***சகோதரிகள்*** *ஒரு சிலரும் மாத்திரம் இவர்களை தேடி சென்று சந்தித்து வருகிறார்கள். ஆனால் அது கடலில் பெருங்காயம் கரைத்ததுபோல்தான் இருக்கும்.*

*மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டவர்கள் ஏராளமானவர்கள் இலங்கையில் உண்டு. அவர்கள் இதை முழுநேர ஊழியமாகத்தான் செய்யவேண்டும் என்பதல்ல. அவரவர்கள்* ***வேலையை, தொழிலை*** *செய்துக்கொண்டே திட்டமிட்டு நேரம் ஒதுக்கி அவர்களை சென்று சந்திக்கவேண்டும்.*

*2017 ஏப்ரல்* ***கால்Fபேஸ்ஸில்*** *நடந்த என் ஆலோசனை ஜெபகூட்டங்களில் என்னை சந்தித்தவர்களில் ஒரு தம்பதியினர் அவர்கள் கணவன்-மனைவியாக எந்த ஒரு விளம்பரமும் இல்லாமல், அவர்கள் அங்கம் வகிக்கும் சபைமக்கள்கூட இவர்கள் செய்யும் ஊழியத்தை அறியார்கள். இந்த குறிப்பிட்ட தம்பதிகள் பஸ் ஏறி பல இடங்களுக்கு சென்று அவர்கள் ஆத்துமாக்களை சந்திக்கிறார்கள். குறிப்பாக* ***டீன்ஏஜ் வாலிப பெண்களையும்,வாலிபர்களையும்*** *சந்தித்து வருவதை நான் கேள்விபட்டு தேவனைத் துதித்திதேன். மனமும்,பாரமும் இருந்தால் கர்த்தர் ஊழிய வழிகளை அவரே திறந்து உதவுவார்.*

## *மற்றொரு ஆபத்து:*

***ஊழியம்*** *என்ற பெயரில் பல பிழையான ஊழியர்கள் இப்படிப்பட்ட சிறுவர்களை, சிறுமிகளை சந்தித்து தங்கள்* ***காம பசியை*** *தீர்த்து அவர்கள் கரும்பு சக்கைபோலாக்கி ஊழியர்களால் அப்படி தூக்கி எறியப்பட்ட சிறுமிகளின் கதைகளையும் இம்முறை ஏராளம் கேள்விப்பட்டேன். இப்படிப்பட்ட* ***காமவெறி*** *பிடித்த ஊழியர்களிமிடருந்தும் பிள்ளைகளை காப்பாற்ற வேண்டியது மிக அவசியமாகிறது.*

*பெண் பிள்ளைகள் தங்கும் விடுதிகளில் பெண்ணோடு-பெண்****(லெஸ்பியன்) கேரக்டர்****உள்ள சில வளர்ந்த பெரிய* ***பெண்கள்*** *அங்குள்ள சிறுமிகளை கெடுப்பதையும் அறிவேன்.* ***சுனாமி கண்ணீர் துடைப்பு*** *கூட்டங்களுக்கு நான் வந்தபோது அந்த துயர நாட்களிலும் அப்படி ஒரு பெண் இப்படிப்பட்ட பாவத்தில் அகப்பட்டு, இப்போது அவள் அந்த இடத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளாள்.*

*அதுபோல* ***ஆணோடு-ஆண் (ஹோமோ செக்ஸ்)*** *பாவங்கள் இலங்கையில் முன்பைவிட அதிகரித்துவிட்டன. இது மாதிரி* ***கருணை இல்லங்களில்*** *தங்கியுள்ள பிள்ளைகளுக்கு மாதம் ஒருமுறை* ***மனநல ஆலோசகரை****(மனநல* ***மருத்துவர்*** *அல்ல) அனுப்பி பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட மனித மிருகங்களிடமிருந்து தங்களை எப்படி காத்துக்கொள்ளவேண்டும் என்று அந்த சிறுமிகளுக்கு அறிவுறுத்த ஏற்பாடு செய்யவேண்டிய அவசியமாகும்.*

*இந்த பாவத்தில் விழுந்தவர்களுக்கும் ஆலோசனையளித்து அவர்களிடமிருந்து பிள்ளைகளை காப்பாற்ற ஏற்பாடு செய்யவேண்டும்.*

*உங்கள் கேள்விக்கு நன்றி. மற்றவர்களுக்கும் இந்த பதில் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# PRINTER DEVIL
# பெரும் கருத்துப்பிழை




Click on the cover above and you will be transported to Google Books where you can see an electronic version of *The Printer's Devil*

2017 மே மாத ஜாமக்காரனில் 14ம் பக்கம் 7ம் பத்தியில் நம் **திரியோக தெய்வத்துக்கு** எதிரான கருத்து இடம் பெற்றுவிட்டது.

நம் **தேவன் திரியேகம்** உள்ளவராக இருக்கிறார். ஆனால் வேதத்தில் (Trinity)**திரியேகம்** என்ற வார்த்தை எங்குமே இடம் பெறவில்லை. நம் தெய்வம் திரியேகமுள்ளவராக இருக்கிறார் என்பதற்கு வேதம் முழுவதும் ஆதாரமாக ஏராளமான வசனங்கள் நிறைந்துள்ளது. ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தின் துவக்கமே அந்த **திரியேக** கருத்தை வலியுறுத்துகிறது.

எங்கெல்லாம் கர்த்தர் **நாம்,நாங்கள்,நம்மை** என்றெல்லாம் குறிப்பிட்டு வேதத்தில் எங்கெல்லாம் எழுதப்பட்டுள்ளதோ அதெல்லாம் **திரியேக** தெய்வத்தை குறிப்பதாகும் என்று என் ஒவ்வொரு கன்வென்ஷன் கூட்டங்களிலும் தவறாமல் பல வருடங்களாக கூறிவருகிறேன். கொலைக்காரர்களையும்,துரோகிகளையும்கூட மன்னித்து நம் வீட்டில் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் **பிதா மாத்திரம் போதும்** என்ற உபதேசத்தை கொள்கையாக கொண்ட **யெகோவா சாட்சி** என்ற சபைகாரர்களை மட்டும் வீட்டில் சேர்க்ககூடாது என்று தெளிவாக கூறியுள்ளேன். அதற்கு ஆதாரமாக 2 யோவான் 8-10, யோ14:23 வசனங்கள் ஆதாரமாக கூறியுள்ளேன். அப்படியே **திரியேக தேவன்** என்ற தலைப்பில் **Dr.Rev.தியோடர்வில்லியம்ஸ்** அவர்கள் எழுதிய கட்டுரையை ஜாமக்காரனில் வெளியிட்டேன்.

ஒவ்வொரு ஜாமக்காரனிலும் என் செய்திகளை,கட்டுரைகளை கம்யூட்டரில் பதிய ஏற்பாடு செய்தபின் எழுத்து பிழைகளை கண்டுபிடித்து முதல்முறைமட்டும் நானே திருத்துவேன். அப்படி திருத்தி கொடுக்கும்போது தவறான கருத்துக்களை கண்டால் **அந்த பகுதியை முழுவதுமாக** அடித்து நீக்கிவிடும்படி குறியிடுவேன். அப்படி நீக்கிவிட நான் குறியிட்ட பகுதிதான் நீக்கப்படாமல் அப்படியே வெளிவந்துள்ளது. இரண்டாம்முறை திருத்த எனக்கு நேரம் இல்லை. சில சமயம் கம்பியூட்டரில் நான் திருத்தியதை கம்பியூட்டர் ஆப்ரேட்டர் நீக்கிவிட்டாலும் அதை **சேமிப்பு**(SAVE) செய்யாமல் போனாலும் இப்படிப்பட்ட தவறு நடக்க வழியுண்டு. திருத்திய **நானும்** உடனே ஊழியத்துக்கு போய்விடுவதால் மேலே குறிப்பிட்ட பெரிய தவறு நடந்துவிட்டது. வாசகர்கள் அந்த குறிப்பிட்ட இரண்டு வரி வார்த்தைகளை அழித்துவிடுங்கள். நீங்களும் அந்த வார்த்தைகளை நீக்காமல் அதை வேறு யாராவது வாசிக்க நேர்ந்தால் அவர்களை குழப்பத்தில் ஆக்கிவிடுவீர்கள். நான் செய்த கவனக்குறைவை நீங்களும் செய்யவேண்டாம். அந்த குறிப்பிட்ட கட்டுரையில் மற்ற பாகங்கள் நம் தெய்வத்தை விளங்கிக்கொள்ள பல நல்ல விஷயங்கள் அதில் உண்டு என்பதால் என் வாசகர்கள் அறிந்துக்கொள்ள வேண்டியே அதை வெளியிட்டேன்.

(அடுத்த மாதம் **2017 ஜுலை மாத** ஜாமக்காரனில் **Rev.Dr.தியோடர் வில்லியம்ஸ்** அவர்கள் எழுதிய **"திரித்துவம்"** என்ற செய்தியை மறுபடியும் வெளியிடுகிறேன்.)

## மற்றொரு தவறு:

அதைப்போலவே பல வருடங்களுக்குமுன் **"திரும்பி பார்க்கிறேன்"** என்ற தலைப்பில் காதல் வலையில் விழுந்துப்போன, இரட்சிக்கப்பட்ட வாலிப பிள்ளைகளுக்காக எழுதப்பட்ட **"ஆவிக்குரிய காதலர்கள்"** என்ற கட்டுரையில் 1 கொரி 7:1ல் **"ஸ்தீரியை தொடாமல் இருப்பது மனிதனுக்கு நல்லது"** என்ற வசனத்தை அப்படியே எழுதி கம்பியூட்டருக்கு அனுப்பினேன்.

அந்த வசனத்தை தலைகீழ் அர்த்தம் வரும் வகையில் **ஸ்தீரியை தொடாமல் இருப்பது மனுஷக்கு நல்லது அல்ல** என்று தெளிவாக அச்சடித்துவிட்டனர். எத்தனை மோசமான வார்த்தையாக பிசாசு வஞ்சகமாக அந்த வசனத்தை மாற்றிவிட்டான்.

இது **மனிதனின் பிழை அல்ல**. டைப் அடித்தது மனிதன்தான் என்றாலும், அர்த்தத்தையே மாற்றும் அளவு தவறு செய்வானா? புத்தகம் பிரிண்டாகிவெளிவந்துவிட்டது.

இப்போது அந்த புத்தகத்தை கேட்டு எழுதும் நபர்களுக்கு ஒவ்வொரு முறையும் மறக்காமல் அந்த குறிப்பிட்ட தவறுள்ள பக்கத்தைதேடி அந்த தவறான **வார்த்தையை** போனாவில் திருத்தி அனுப்ப வேண்டியதானாது. இப்போதுதான் அந்த புத்தகம் முழுவதும் தீர்ந்துபோய் மறுபடியும் அச்சடிக்க ஏற்பாடு செய்துள்ளேன்.

## மற்றொரு தவறு:

**"திரும்பி பார்க்கிறேன்"** என்ற என் மற்றொரு புத்தகத்தில் **5 மற்றும் 6** அத்தியாயங்கள் மட்டும் தனி புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டேன். ஒவ்வொரு வாலிப பிள்ளைகளுக்கும் எந்தெந்த விதத்தில் சோதனைகள் வரும்,**பாலுணர்வு** சம்பந்தமான சோதனைகளை வராமல் தடுப்பது எப்படி?, அந்த சோதனையிலில் விழுந்துவிட்டால் எப்படி அந்த குறிப்பிட்ட பாவத்திலிருந்து எழுவது போன்ற பல விஷயங்களை என் வாலிப வயதில் நான் விழுந்த சோதனைகளில் அதை நான் ஜெயித்த விவரங்களை விவரித்து எழுதிக்கொண்டு வரும்போது **அற்பகூழுக்காக** தன் சேஷ்டபுத்திர பாக்கியத்தை இழந்த **காயினைப்போல** என்று தவறாக அச்சடிக்கப்பட்டுவிட்டது. நான் அதை **ஏசாவைப்போல** என்றுதான் எழுதி குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் அந்த இடத்தில் சம்பந்தமே இல்லாத வேறொரு **நபரின் பெயர்** எப்படி வந்தது?. **ஏசாவுக்கு** பதில் **காயின்** என்று எப்படி மாயாஜாலம்போல் மாறியது.

இதைத்தான் **அச்சக பிசாசு**(Printer Devil) என்று கூறுவார்கள். அந்த புத்தகம் இன்னும் சில ஆயிரங்கள் பாக்கியுள்ளது. அதை வேண்டும் என்று எழுதி கேட்கிறவர்களுக்கு அந்த குறிப்பிட்ட 13ம் பக்கத்தை தேடி பிரித்து **காயின்** என்ற பெயரை அடித்து **ஏசா** என்று எழுதி அனுப்பி கொண்டிருக்கிறேன். இப்படிப்பட்ட தவறுகள் மறுபடியும் வராமல் ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்ள முயற்சிக்கிறேன்.

**தவறுகளை சுட்டிக்காட்டி** தொலைப்பேசிமூலமாகவும், கடிதம், இமெயில் மூலமாகவும் அறிவித்த என் அருமை ஜாமக்காரன் வாசகர்களுக்கும், **நாகர்கோவில்** வேதாகம கல்லூரி **மாணவர்களுக்கும்** நன்றி கூறிக்கொள்கிறேன். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# GOD'S PERFECT PLAN FOR THOSE WHO HAVE FAILED



**Whatever your blunders or failures,you can make a new beginning with God.**

**SELECTED**

There are many brothers and sisters who feel that,because they have sinned and failed God at some time in their past, they cannot fulfil God's perfect plan for their lives now.

Letus look at what the Scriptures have to say on this matter, and not lean on our own understanding or our sense of logic. Notice, first of all, how the Bible begins, In the beginning God created the heavens and the earth.(Gen 1:1). And the heavens and the earth must have been perfect when God created them, for nothing imperfect of incomplete can ever come forth from His hand. But some of the angels whom He had created fell away. and this is described for us in Isaiah 14:11-15 and Ezekiel 28:13-18. It was then that the earth came into the condition described in Genesis 1:2- "firmless,empty and dark".

The rest of Genesis 1 described how God worked on that shapeless. empty,dark mass and made something so beautiful out of it that He himself declared it ti be "very goo"(Gen 1:31). We read in Genesis 1,2,3 that the Sprit of God moved over the earth, and God spoke His word- and this was what made the difference. What is the message in that for us today?.

**God's Promise:**

No matter how much we may have failed or how much we may have made a mess of things,God can still makes something gorious out of our lives. God had a perfect plan for the heavens and the earth when He created them. But this plan had to be set aside because tof Lucifer's failure. But God remade the heavens and the earth and still produced something very good out of it.

Now consider what happened next. God made Adam and Eve and started all over again. God must have had a perfect plan for them too. which obviously didnot include their eating of the tree ot the knowledge of good and evil. But they did eat of the forbidden tree and frustrated God's original plan for them- whatever the plan may have been.

Logic would now tell us that they could not fulfil God's perfect plan any longer. Yet we see that when God came to meet them in the garden. He did not tell them that they would now have to live only on His second best for the rest of their lives. No. He promises them in Genesis 3:!5 that the seed of the women would bruise the head of the serpent. That was a promise of Christ;s dying for the sins of the world and overcoming Satan on Calvary.

Now consider this fact and see it you can reason it out.

**God's Love:**

We know that Christ's death was part of God's perfect plan from all enternity. " The Lamb was slain from the foundation of the world"Rev.13:8. Yet we alson know that Christ died only because Adam and Eve sinned and failed God. So, Logically we could say that God's perfect plan to send Christ to die for the sins of the world was fulfilled, not despite, but because od Adam's failure! We wouldnot have known God's love shown on Calvary's cross. were it not for Adam's sin. That baffles logic, and that is why the Scriptures say that we should "not lean on our own understanding"(Pro 3:5).

If God worked according to mathematical logic, then we would have to say that Christ coming to the earth was God's second best plan. But it would be blasphemous to say so. It was part of God's perfect plan for man. God makes no mistakes. But since God makes no mistakes. But since God is almighty as well as sovereign, and since He also knows the end from the beginning,.and since He is always silently planning for us in love, human reasoning fails when we try to explain His dealings with us.

God's ways are not our ways and His thoughts not our thoughts. The difference between them is as great as the distance between heaven and earth(Isa 55:8,9). So it is good for us to set our clever reasoning and logic aside when trying to understand God's ways. What then is the message that God is trying to get through to us right from the opening pages of the Bible?just this, that He can take a man who has failed and make something glorious out of him and still make him fulfil God's perfect plan for his life.

That is God's message to man, in the Bible, and we must never forget it. God can take a man who has failed repeatedly, and still make him fulfil His perfect plan not God's second best, but God's best plan. This is because even the failure may have been part of God's perfect plan to teach him a few unforgettable lessons. This is impossible for human logic to grasp, because we know God so very little. It is only broken men and women whom God can use. And one way He breaks us is through repeated failures. Part of the apostle Peter's training for leadership was failure. The Lord used Peter's failure to break him.

**God's Enabling Grace:**

One of the biggest problems that God has with us is to bless us in such a way that the blessing doesnot puff us up with pride. To get victory over anger and then to be proud of it,

is to fall into a far deeper pit than the one we were in! God has to keep us humble in victory. Genuine victory over sin is always accompained by the deepesthumility. This is where repeated failures have a part to play in destroying our self-confidence so that we are convinced that victory over sin is not possible apart from God's enabling grace. Then, when we do get victory, we can never boast about it.

Further, when we have failed repeatedly ourselves, we can never despise another who fails. We can sympathise with those who fall, because we have come to know the weakness of our own flesh. through our own innumerable falls. we can "dealgently with the ignorant and misguided, since we ourselves are beset with weakness"(Heb 5:2).

Hearing such a message, the logically minded man can say, "Then let us sin all the more so that good may come!" Romans 3:7,8(LB) answers such a man with these words. "You say, My dishonesty brought God glory by pointing up His honesty" If you follow through with that idea. you come to this, The worse we are, the better God likes it! But the damnation of those who say such things is just". No, we do not preach that we should sin so that good may come. Neither do we say that we can take advantage of God's deliberately, and still avoid reaping what we have sown. No. But we do say that human logic cannot grasp the grace of God to fallen men. Nothing is impossible for God. not even to bring us into His perfect will, after we have failed miserably and repeatedly, Only our unbelief can hinder Him.

**Our Response:**

If you say, "But I have messed up things so many times. It is impossible for God now to bring me into His perfect plan" then it will be impossible for God. because you cannot believe in what he cando for you. But Jesus said that nothing is impossible fog God to do foru us. if only we believe.

"Be it done to you according to your faith" is God's law in all matters(Matt 9:29). We will get what we have faith for. If we believe that something is impossible for God to do for us. then it will never be fulfilled in our lives.

On the other hand,you will discover at the judgment seat of Christ that another believer who had made a greater mess of his life than you, nevertheless fulfilled God's perfect plan for his life - just because he believed thad God could pickup the broken pieces of his life and make something very good out of it. What regret there will be in that day. when you discover that is was not your failures(however many they may have been) that frustrated God's plan in your life, but your unbelief!.

The story of the prodigal son, who wasted so many years, shows that God gives His best even to failures. The father said, "Quickly bring outh the best robe" for the one who had let him down so badly,. This is the message of the Gospel- redemption and a new beginning, not just once, but again and again. for God never gives up on anyone.

**Our Reward:**

The parable of the estate owner who went out hiring labourers(Matt 20:1-16). also teaches the samething. People who were hired at the eleventh hour were the ones to be rewarded first. In other words, those who had wasted 90/.(11/12th) of their lives. doing nothing of eternal valur, could still do something glorious for God with the remaining 10/- of their lives. This is a tremendous encouragement to all who have failed.

"The reason the son of God was manifested was to undo(dissolve) the works the devil has done(1 jn 38 amplified Bible). That means that Jesus came to untie all the knots in our lives. Picture it like this. All of us started at babyhood with a nice ball of string, But by now that string has been knotted up with ten thousand knots, and we donot have any hope that we can ever untie those knots. and we donot have any hope that we can ever untie those knots. We are discouraged and depressed as we look at our lives. The good news of the Gospel is that Jesus has come to untie every one of those knots.

you say, "That is impossible" well then, it will be done to you according to your faith. It will be impossible in your case. But I hear someone else. whose life is worse than yours, saying "Yes, I believe that God will do that in me" To him too it will be according to his faith. In his life, God's perfect plan will be fulfilled.

Application:

God spoke His word to Jeremiah through a pracitcal illustration (18:6). Jeremiah was asked to go to a potter's house. and there he saw the potter trying to make a vessel. But the vessel " was spoiled in the hand of the potter".So what did the potter do? He remade it into another vessel, as it pleased the potter to make".

"Can I not, O.... deal with you as this potter does?" was the Lord's question(v 6). (fill in your name in those dotted lines, and that would be God's question to you).

If there is godly sorrow in your life for all your failures, then even if your sins are like scarlet or red like crimson, not only will your heart be made as white as snow as promised under the old covenant(Isa 1:18). but God promises even more under the new covenant. " not even to remember your sins any more"(Heb 8:12).

Whatever your blunders or failures, you can make a new beginning with God. And even if you have made a thousand new beginnings in the past and have failed, you can still make the 1001st new beginning today. God can still make something glorious ou of your life. While there is life, there is hope.

So, never fail to trust God. He cannot do many mighty works for many of His children. not because they have failed Him in the past, but because they will not trust Him now. Let us then "give glory to God by being strong in faith"(Rom 4:20). trusting Him in the days to come for the things which we considered impossible up until now.

All people - young and old-can have hope, on matter how much they may have failed in the past, if only they will acknowledge their failures, be humble and trust God. Thus we can all learn from our failures and go on to fulfil God's perfect plan for our lives. And in the ages to come, He can show us forth to others as examples of what He could do with those who were total failures. In that day He will show what He could do in us, through the "surpassing riches of His grace in kindness toward us in Chirst Jesus"(Eph 2:7).

# Beware of Photo Culture!

- Selected - Living stream

These days, after the trend of having boy/girl friends has set in, the practice of taking photographs by mobile phone has become a common thing. Based on the recent happenings, it can be seen that the following are the dangers that are involved here:

- Your friend (boy/girl) may show your photograph or the one taken as two of you together, to his other friends and publicize your friendship
- He/she may go to the extent of stopping your wedding by showing your photograph or the Video. Or he/she can black mail you after marriage, with that or even wreck your life.
- In case you have cut off his friendship after knowing his vile nature or after coming to your senses, chances are high that he may black mail you with that photograph as a proof for your relationship and compel you to marry him.
- Your photograph may get displayed to so many others by your girl/boy friend either through mobile phone or Email.

The young boys of these days are very smart; they may try to take your photograph with the intention of keeping it as a proof for them or use it as a weapon, in case something went wrong later.

Yes, photographing today's enjoyment may be fun; however it may ultimately turn out to be a deadly weapon that would destroy your life.




# பிலாத்து



**Rev.தியோடர் வில்லியம்ஸ்**

ஆவிக்குரிய வாழ்க்கையிலே செய்யவேண்டிய தீர்மானங்களைச் சரியான சமயத்திலே ஆண்டவருக்கு ஏற்றபடி செய்யாமல் நாம் **தப்பிக்கொள்ளவும் முடியாது. தள்ளிப்போடவும் முடியாது.** இதைப் பிலாத்துவின் அனுபவித்திலிருந்து அறிந்துக்கொள்கிறோம்.

லூாக்கா 23ம் அதிகாரத்திலே **பிலாத்துவுக்கு** முன்பாக **இயேசுவானவர்** கொண்டுவந்து நிறுத்தப்படுகிற்ர். அவரை நியாயந்தீர்க்க வேண்டிய பொறுப்பு. அவன்மேல் விழுகிறது. இந்த நல்ல சந்தர்ப்பம்,அவனுடைய ஆத்தும ரட்சிப்பிற்கு ஏதுவாக மாறியிருக்கக்கூடும். பிலாத்து தன் வாழ்க்கையிலே தன் விருப்பப்படி வாழ்ந்தவன். தன் தவறான தீர்ப்பினால் எத்தனையோ குற்றமற்ற மக்களின் இரத்தத்தைச் சிந்தினவன். **மனச்சாட்சியை** கடினப்படுத்தி தனக்காகவே வாழ்ந்தவன். ஆனால், இந்த சமயத்திலே அவனுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. **உலக ரட்சகர்** அவனுக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தப்படுகிறார்.

அவர் **யூதருக்கு ராஜா அல்லது மேசியா** என்று அவன் கேள்விப்படுகிறான். அவர் **தேவனுடைய குமாரன்** என்றும் கேள்விப்படுகிறான். இந்த வார்த்தைகளையெல்லாம் கேட்கும்போது **கலக்கமடைந்தான்.** இப்போது அவனுக்கு ஒரு வாய்ப்பை தேவன் தருகிறார்.

என் அருமையான சகோதரனே, சகோதரியே, **எதிர்பாராத சமயங்களிலே,** எதிர்பாராத வழிகளிலே ஆண்டவர் நம்மைச் சந்திக்க முயலுகிறார். மற்ற மக்களின் மூலமாகவும் சூழ்நிலை களின் மூலமாகவும் தம்முடைய **வேத வசனங்களின் மூலமாகவும்** கர்த்தர் நம்மோடு பேசுகிறார். பரிசுத்தஆவியானவரும் நம்மோடு வாதாடுகிறார். இதை நாம் உணர்ந்திருக்கிறோமா? விசேஷமாய் நமது ஆண்டவருடைய பாடுகளைப்பற்றி தியானிக்கும் நாட்களிலே ஆண்டவர் நம்மோடு பேசுகிறதை நாம் உணருகிறோமா? பலவிதமான வழிகளில் ஆண்டவரின் சத்தங்களை நமது வாழ்விலே கேட்கிறோமா?

பிலாத்துதன் வாழ்க்கையிலும் அவன் இந்த யூதமக்களின் மூலம் இயேசுகிறிஸ்து வானவரைப்பற்றிய சில சத்தியங்களைக் கேட்கிறான். இவ்விதமாக கடவுளின் சத்தம் அவனுக்கு வருகிறது. தனது சொந்த மனைவியின் மூலமாகவும் கர்த்தர் அவனை எச்சரிக்கும் சத்தத்தையும் கேட்கிறான். அவர் **குற்றமற்றவர், நிரபராதி** என்று அவன் மனைவி அவனுக்கு செய்தி சொல்லி அனுப்புகிறாள். இதை மத்தேயு 27ம் அதிகாரத்திலே பார்க்கிறோம். இவைகளின் மத்தியில் அவனுடைய மனசாட்சியின் சத்தம் வேறு போராடுகிறது. நீதியின்படி நியாயத்தின்படி இப்போது அவன் நடக்கவேண்டும். **அவர் குற்றமற்றவர்** என்பதை விசாரித்து அறிந்துக்கொள்ளுகிறான். மூன்று முறை தான் தெளிவாக விசாரித்தை பிலாத்து அறிக்கையிடுகிறான்.

பிற்பாடு, **மக்களின் சத்தத்தையும்** கேட்கிறான். அது மக்கள் கூட்டத்தின் சத்தம். இந்த சத்தம் என்ன கூறுகிறது? அவரை **சிலுவையில் அறையவேண்டும்** எனக்கூறுகிறது. லூாக்கா 23:21ல் **"அவர்களோ,அவனைச் சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள்"** என்று காண்கிறோம். இறுதியில் **மக்களின் சத்தத்துக்குத் தன்னை** அவன் ஒப்புக்கொடுத்துவிட்டான்.

என் அருமையான சகோதரனே, சகோதரியே, **ஆண்டவரின் சத்தத்தைக்கேட்கும் போது** மற்ற எல்லா சத்தங்களையும் நாம் ஒதுக்கிவிடவேண்டும். நாம் மற்ற சத்தங்களுக்குக் கதவை அடைத்துவிடவேண்டும். இல்லையெனில், மற்ற சத்தங்களுக்குக் கொஞ்சம் இடங்கொடுப்போமானால் நம் இதயத்தின் ஒரு ஜன்னலையாவது திறந்துவைத்து அந்த சத்தம் நம்மை எட்டிச் சேரும்படி இடங்கொடுப்போமானால் நாம் எந்த விஷயத்திலும் சரியான தீர்மானத்தைச் செய்யமுடியாது.

கடவுளுடைய சத்தத்தைக் கேட்கும்போது இது **கறுப்பு அல்லது வெள்ளை** என்பதை அவர் நமக்குத் தெளிவாகக் கூறுகிறார். தீர்மானிக்கவேண்டியது நம்முடைய பொறுப்பு.

**கருப்பைக் கறுப்பு** என்றும் **வெள்ளையை வெள்ளை** என்றும் ஏற்றுக்கொண்டு தீர்மானிக்கவேண்டும். ஆனால் ஒன்றுமே தீர்மானிக்காதபடி நாம் தப்பிஓட எண்ணும்போது அல்லது அதைத் தள்ளிப்போட எண்ணும்போது நமக்குள் பெருங்குழப்பம் ஏற்பட்டுவிடுகிறது. **சன்மார்க்க** சம்பந்தமான மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கையில் குழப்பம் ஏற்பட்டு விடுகிறது. அதன்பின் தீர்மானிக்கும் சக்தியை இழந்துவிடுகிறோம். அதோடு தீர்மானம் எடுப்பதற்குண்டான தைரியமும்,பலமும் நமக்கு இல்லாமற்போய்விடுகிறது. இதை நம்முடைய வாழ்க்கையில் அறிந்திருக்கிறோமல்லவா?.

உன் சொந்த வாழ்வில் நீ எதைச் செய்யவேண்டும்? எந்த வழியில் நடக்கவேண்டும்? என்று திட்டமாக ஆண்டவர் உன்னோடு பேசியிருக்கிறார். ஆனால், உனது **சுயநலத்திற்கு** இடங்கொடுத்து அந்தத் தீர்மானத்தைச் செய்யாதபடி தள்ளிப்போடுகிறாய், **மற்றவர்களின் சத்தம்** உன் காதில் விழுவதற்கு இடங்கொடுத்துவிட்டாய். மற்றவர்களின் சத்தம் தான் உன் காதில் மேலோங்கி நிற்கிறது. கடவுளின் சத்தமோ உன்னிடத்தில் அதிகம் தெளிவாக கேட்காதபடி மங்கிவிடுகிறது.

இப்படிப்பட்ட நிலையிலேதான் உன் வாழ்க்கையில் குழப்பம் ஏற்பட்டுவிடுகிறது. (டையோசிஸ்ஸிலும்)குடும்ப வாழ்விலும் இதைப் பார்க்கிறோம். பிள்ளைகளைப் பொறுத்தமட்டிலே எந்தத் தீர்மானத்தைச் செய்யவேண்டும் என்று ஆண்டவர் உன்னோடு தெளிவாக பேசியிருக்கிறார். ஆனால் அந்தத் தீர்மானத்தைச் செய்யாதபடி நீ தள்ளிப்போடும்போது உறவினர்களின் சத்தம், **பாரம்பரியத்தின் சத்தம்** வேறு பலவிதமான முறைப்பாடுகளின் சத்தம் உன்னுடைய வாழ்க்கையிலே உன்னை மேற்கொள்ளுகிறது.

## ஜாமக்காரன் குறிப்பு:

திருச்சபையின் உயர்ந்த ஸ்தானத்தில் **பிஷப்பாகவோ,மாடரேட்டராகவோ,தலைமை ஆயராகவோ** பதவி வகிக்கும்போது வேதவசனத்துக்கு விரோதமான கொள்கையை திருமண்டலத்தில் திணிக்க சினாடு நிர்பந்திக்கும்போது சபை மக்களின் பிரதிநிதிகளான இந்த உயர்ந்த பதவியில் உள்ளவர்கள் பெரும்பான்மையாக உள்ள உலக பிரகாரமான சத்ததுக்கு செவிசாய்கிறோமா அல்லது வேதவசனத்துக்கு செவிசாய்கிறோமா என்பதை **பிலாத்துப்போல** தீர்மானிக்கும் பொருப்பு பதவி வகிப்பவர்களுடையது.

**அரவாணிகளை ஆயர் ஆக்கவேண்டும் - ஆண் புணர்ச்சி**(Homo-sexual) **காரர்களை ஆயாரக்கவேண்டும். பெண்களை ஆயராக்க வேண்டும்** என்பது போன்ற வேத வசனத்துக்கு விரோதமான உலக சத்தத்துக்கு செவி சாய்த்தால் அப்படிப்பட்ட சபைகளின் தலைவர்களுக்கு **பிலாத்துவின்** கதிதான் உண்டாகும்.

**CSI சினாட் ஹைதராபாத்தில்** நடத்திய கூட்டத்தில் **ஆணோடு-ஆண்** செய்யும் திருமணம்(ஹோமோசெக்சுவல்) ஏன் நம் சபை அனுமதிக்ககூடாது என்பதைக்குறித்து ஒவ்வொரு திருமண்டலத்திலும்,பிஷப்மார்களும்,ஆயர்களோடு,சபையோடு பேசி அவரவர்களின் தீர்மானம் அறிவிக்கவேண்டும். அப்படியே வேதாகம கல்லூரிகளிலும்,வேத பண்டிதர்களை ஆராய்ச்சி செய்து அறிவிக்க செய்யவேண்டும் என்று அறிவித்தபோது அந்த கூட்டத்திலேயே அமர்ந்துள்ள நம் **பிஷப்மார்** இந்த விஷயத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியம் இல்லாத அளவு நம் வேதமே அது பாவம்(**சோதோம்கொமோரா பாவம்**) என்று தெளிவாக எழுதியிருக்கும்போது எதற்கு ஆராய்ச்சி எதற்கு?அபிப்ராயம் எதற்கு? என்று தலையில் தட்டிதைப்போல் எதிர்த்து அதை அப்படியே நிறுத்தியிருக்கலாமே!. தீர்ப்பும்,பதிலும் சொல்ல வேண்டிய பிஷப்மார் அன்று மௌனம் சாதித்தால் பிலாத்து பொறுப்பை தட்டிகழித்ததைபோல் ஆகிவிட்டதே! கொஞ்சகொஞ்சமாக CSI அந்த பாவத்துக்கு இடம்கொடுக்க ஆரம்பித்துவிட்டது. சபைகள் ஜாக்கிறதை!.

செய்யவேண்டிய தீர்மானத்தைச் செய்யக்கூடாதபடி நீ பலனற்றவனாய் போய்விடுகிறாய். இதைத்தான் பிலாத்துவின் வாழ்க்கையிலே பார்க்கிறோம். பண்டிகை தோறும் யாராவது ஒரு குற்றவாளியை விடுதலை பண்ணுவது வழக்கம். ஆனால், **பிலாத்து பரபாஸ், இயேசு** ஆகிய இரண்டு பேரை இங்கு தெரிந்துக்கொள்கிறான். இந்த இரண்டு பேரிலே ஒருவரை மாத்திரம் விடுதலை ஆக்கவேண்டும். அதற்கு மக்களிடத்தில் அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்கிறான். விடுதலை பண்ணவேண்டியதும், தீர்மானிக்க வேண்டியதும் அவனுடைய பொறுப்பு. ஆனால் அவனோ **மற்றவர்களைத்** தீர்மானிக்கும்படி கேட்கிறான்.

அவர்கள் அனைவரும் **பரபாசைத்** தெரிந்துக்கொள்ளுகிறார்கள். **இயேசுவை ஒதுக்கி** விடுகிறார்கள். அவர்களுடைய தீர்மானத்திற்கு பிலாத்து தலைவணங்கியதைப்போல் நாம் செய்யாதபடி, **மற்றவர்கள் நமக்காகத் தீர்மானிக்கும்படி** நாம் கோழைகளாகி விடுவோமானால், மற்றவர்களின் தீர்மானத்திற்கு நாம் தலைக்குனிய வேண்டியாதயிருக்கும். அவர்களுடைய தீர்மானத்தின் விளைவுகளுக்கும் நாம் உள்ளாகிவிடவேண்டிய நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலை உண்டாகாதபடி ஆண்டவர் நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும்.

என் அருமையான சகோதரனே, சகோதரியே,(பிஷப்மர்களே,மாடரேட்டரே) மற்றவர்கள் உனக்காகத் தீர்மானிக்கும்படி, நீ இடங்கொடுத்துவிடாதே, **ஆண்டவர்** எதை உனக்கு வசனத்தின்படி எடுத்துக்காட்டுகிறாரோ, அதின்படி நீ கீழ்ப்படியவேண்டும். லூக்கா 23ம் அதிகாரம் 23ம் வசனத்திலே, அவரை சிலுவையில் அறையவேண்டும் என்று அவர்கள் உரத்த சத்தத்தோடு கேட்டுக்கொண்டே இருந்தார்கள் என்று பார்க்கிறோம். **அவர்களும்** பிரதான ஆசாரியரும் **இட்டசத்தமே மேற்கொண்டது.ஜெயித்தது!.** மற்ற எல்லா சத்தங்களும் மங்கிவிட்டன. அவர்களுடைய சத்தம் மேற்கொண்டது. இப்படித்தான் நம்முடைய வாழ்க்கையிலும் ஆகிவிடும். இதற்கு நாம் இடங்கொடுத்துவிடக் கூடாது. பிலாத்துவின் **மனச்சாட்சியின் சத்தம், மனைவியின் சத்தம்,தேவனின் சத்தம்** பிலாத்து தெளிவாக கேட்டும் இவையெல்லாவற்றை யும்விட **மக்களின் சத்தம்** பிலாத்துவை மேற்கொண்டது. அவர்கள் விருப்பத்திற்குப் **பிலாத்து** இணங்கிவிட்டான். இதன் விளைவுகளை அவன் சந்திக்க வேண்டியதாயிற்று.

என் அருமையான சகோதரனே,சகோதரியே, நம் வாழ்க்கையிலே கோழைத்தனத்துக்கு இடங்கொடுத்து, கிறிஸ்துவை நாமே **காட்டிக்கொடுக்கிறவர்களாய்** இருந்துவிடக்கூடாது. நம் ஆண்டவர்தாமே நாம் செய்யவேண்டிய தீர்மானங்களைச் செய்யவும், எதிலே கீழ்ப்படிய வேண்டுமோ அதிலே கீழ்ப்படியவும், இந்நாட்களிலே பூரண ஒப்புக்கொடுத்தலின் மனதை நம் அனைவருக்கும் கொடுத்து நம்மை வழிநடத்துவாராக.ஆமென்.

# CSI MALABAR DIOCESE
# கண்ணனூர் ஹெபிக்ஸ் CSI நினைவாலயம் கன்வென்ஷன்



North Kerala Diocese என்பதை **மலபார் டையோசிஸ்** என்று CSIயில் பெயர் மாற்றம் செய்தபின், முதன்முறையாக **மலபாரில் பேசல் மிஷன்** என்ற ஆரம்ப கால சபையில் பிறந்து வளர்ந்த ஒரு ஆயர். **Rt.Rev.Dr.Royce Manoj Victor** அவர்கள் பிஷப்பாகினபின் ஆரம்பிக்கப்பட்ட மலபார் டையோசிஸ் கன்வென்ஷனில் பேசியது எனக்கு சந்தோஷத்தை கொடுத்தது.

**பிஷப் எலக்ஷன்** சமயத்தில் மலபார் டையோசிஸ் CSI மக்களுக்கு விசேஷ கட்டுரை எழுதியிருந்தேன்.

வேதபுத்தகம் முதன்முதலாக **மலையாள** மொழியில் மொழிபெயர்த்தது Rev.GUNTARK என்ற **ஜெர்மனி மிஷனரி** ஆகும். அவரால் ஆரம்பிக்கப்பட்டதுதான் **பாஸல் மிஷன்** சபைகள் ஆகும். அன்றைய காலத்தில் **வடக்கு கேரளா** என்று அழைக்கப்படாமல் **மலபார்** என்றுதான் கேராளவின் வடக்கு பிரதேசம் அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்டது. **மலபார்** போலீஸ் என்று இன்றும் அந்த பகுதி போலீஸ் ஜனங்களால் குறிப்பிடப்படுகிறது.

**பாஸல் மிஷன்** ஞானப்பாடல்கள் மற்ற எல்லா ஞானப்பாடல்களை காட்டிலும் வித்தியாசமானதும், அர்த்தம் உள்ளதும், நல்ல ரகம் உள்ளதுமாகும். இன்றும் அதே ராகத்தில்தான் அனைத்து மலபார் CSI சபைகளிலும் ஆராதனை பாடல்களாக பாடப்படுகிறது.

இங்கு நான் 5வது முறையாக கன்வென்ஷனில் பேசினேன். அன்று மலபார் மக்கள் குறிப்பாக **கண்ணூர்,காலிகட், ஷோரனூர்** பகுதி CSI மக்கள் என்னிடம் காண்பித்த அதே அன்பு மாறாமல் இருப்பதைக்கண்டு தேவனை துதித்தேன்.

இதுவரை **மத்திய கேரளாவிலிருந்து** வந்த ஆயர்கள்தான் **பிஷப்பாக** தெரிந்தெடுக்கப் பட்டார்கள். இந்த எலக்ஷனிலிருந்து அனைத்து ஆயர்மாரும், **மலபார்** மண்ணில் பிறந்து **பாஸல் மிஷன்** சபையில் வளர்ந்த ஒரு ஆயரை ஒற்றுமையுடன் தெரிந்தெடுங்கள் என்று சிறப்பு கட்டுரை எழுதினேன்.

மக்களும் ஆயர்களும் ஏகமனதாக **பாஸல் மிஷன்** ஆயரை அதிக ஓட்டு எண்ணிக்கை யுடன் முழு மெஜார்டியுடன் வெற்றிபெற வைத்தனர். அவரை எதிர்த்து நின்றவர் என் நெருங்கிய நண்பரும் **கோட்டயம் டையோசிஸ்** Clargey Secretaryயும்மாக பணியாற்றியவராகும். அவர் தோற்றுப்போனார். அவர் இந்த பிஷப் எலக்ஷனில் தோற்றுப்போக என் ஜாமக்காரனில் நான் என் எழுதிய கட்டுரையும் ஒரு காரணமாகும். ஆகவே அவருக்கு இப்போது என்மேல் முன்புபோல் நெருக்கம் இல்லாமல்போனது, மேலும் என்மேல் வெறுப்பும் உண்டானது.

கடந்த மார்ச் மாதம் கண்ணனூர் சிஎஸ்ஐ கூட்டங்களில் பேச நான் **மலபார்** வந்தபோது பிஷப் எலக்ஷனில் யார் ஜெயிக்கவேண்டும் என்று எழுதிய கடந்தகால நிகழ்ச்சிகளெல்லாம் என் ஞாபகத்தில் வந்தது. கண்ணூர் CSI சபை தலைமை ஆயர். **Rev.Trevor Jyotish** அவர்கள் இக்கூட்டங்களை மிகவும் ஆசீர்வாதமாக நடக்க காரணமானவராகும். மாவட்ட சேர்மன் Rev.Micheal அவர்களும், Rev.Sinose Manaran அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கேரளா கண்ணூர் CSI சபையின் பாடல் குழு கேரளத்தில் பிரசித்தி பெற்றது. என் நண்பரும், பிரபல பாட்டுகாரருமான **சகோ.சிரில்** அவர்களும், அவர் பிள்ளைகளும், சபையில் உள்ள மற்ற பாடல் குழுவினரும் நான் பிரசங்கம் செய்த கூட்டங்களில் பாடல்கள் பாடி கூட்டத்தை சிறப்பித்தனர்.கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

# CSI KANYAKUMARI DIOCESE CHINTHANVILAI CSI CHURCH CONVENTION





கன்னியாகுமரி மாவட்டம் **சிந்தன்விளை** CSI வாலிபர் சங்கம் பொருப்பெடுத்து ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டங்களை Rev.C.Gnanadhasan(சேகரத்து போதகர்) அவர்கள் தலைமையில் **Rev.J.ஸ்டீபன்** சபை ஆயர் முன்னிலையிலும் இக்கூட்டங்கள் சிறப்பாக நடந்தேறின. சனிக்கிழமை நடந்த ஆலோசனை கூட்டங்களுக்கு பல்வேறு இடங்களிலிருந்தும், சில குடும்பங்கள் வந்து ஆலோசனைப்பெற்று ஜெபித்து சென்றனர். திருவனந்தபுரத்திலிருந்தும் கார்களில் சில குடும்பத்தினர் வந்திருந்தனர். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

# கன்னியாகுமரி CSI டையோசிஸ்
# பயணம் CSI சபையின் 131வது ஆண்டு சபை நாள் விழா






கன்னியாகுமரி மாவட்டம் **மார்த்தாண்டம்** அருகே **பயணம்** என்ற ஊரில் உள்ள CSI சபையில் 131வது சபை நாளை நற்செய்திப் பெருவிழாவாக ஏப்ரல் 27,28,29 மூன்று நாட்கள் நடத்தினார்கள். இக்கூட்டங்களை சபை ஆயர்.Rev.G.Sathiyalal Vijin அவர்கள் இந்த கூட்டங்களை சிறப்பாக நடத்தினார்கள். டிஸ்ட்ரிக்ட் சேர்மனும், CSI தலைமை ஆயரும் தலைமை தாங்கி கூட்டத்தை சிறப்பித்தனர். மார்த்தாண்டத்திலிருந்து அநேக குடும்பங்கள் இக்கூட்டங்களில் கலந்துக்கொண்டு கர்த்தரின் வசனத்தை கேட்டார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

## வாசகர் கடிதம்

ஏப்ரல் மாத ஜாமக்காரன் இதழை இன்றுதான் வாசித்தேன். **மெஞ்ஞானபுரம் ஆலய அசனம்** பற்றி செய்தி வெளியிட்டிருந்தீர்கள். **அசனத்தன்று மதுபானம்** அருந்துவது கிட்டத்தட்ட எல்லா ஊர்களிலும் நடக்கிறது. மிஷனரி ஜான்தாமஸ் உருவாக்கிய **மெஞ்ஞானபுரம் சபை** இன்று எவ்வளவு **சீர்குலைந்துவிட்டது** என்பதை **வானமுதம்** என்ற பத்திரிக்கையில் சில வருடங்களுக்கு முன் சிறுகதையாக சகோ.இம்மானுவேல் சுந்தர் எழுதினார்.

அவர்களுடைய விழாக் கொண்டாட்டத்தின் இறுதிநாளில் திரைப்படமும் காட்டுகிறார்கள். எத்தனை ஆழமாய் பரிசுத்த குலைச்சல் ஆக்கிவிட்டார்கள். அதை சபையின் சார்பில் செய்யாமல் ஒய்.எம்.சி.ஏ சார்பில் நடத்துவதைப்போல் சமாளிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.

உங்களுடைய செய்தியைப்படித்து எப்படியாவது பலர் மனம் திருந்தட்டும்.

**- ஜான் - தூத்துக்குடி**

**முக்கிய அறிவிப்பு:** டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு **வாட்ஸ் ஆப்,பேஸ்புக்** எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக்குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் **வாட்ஸ் ஆப்,பேஸ்புக்கில்** எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன். அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன்.

**- டாக்டர்.புஷ்பராஜ்**

# திண்டுக்கல் மாவட்டம் பழனியில் நடந்த என் முதல் பொது கூட்டம்




வழமையாக CSI சபை கமிட்டி,ஆயர் ஆகியவர்கள் கூட்ட ஏற்பாடுகள் செய்து அழைக்கப்பட்ட கூட்டங்களில்தான் இதுவரை **பழனி** நகரில் இரண்டுமுறை கன்வென்ஷனில் பேசியிருக்கிறேன். முதன்முதலாக CSI சபையில் உள்ள பழனி **நண்பர்கள் ஜெப ஐக்கியம்** என்ற பெயரில் சில ஜெப வீரர்கள் என்னை அழைத்து பொது மைதானத்தில் வைத்து பெரிய அளவில் இக்கூட்டங்களை நடத்தினார்கள். இந்த சகோதரர்கள் வாரந்தோறும் பழனியில் CSI சபைமக்களும்,மற்ற சபையில்உள்ள சில நண்பர்களும் கூடி ஜெபகுறிப்புகளை வைத்து ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யாவரும் இணைந்துதான் இந்த மூன்றுநாள் ஆவிக்குரிய கூட்டங்களை தங்கள் சொந்த செலவில் நடத்தி அனைத்து கிறிஸ்தவர்களும் இரட்சிப்படையவும், வசனத்தில் வளரவும் நல்ல ஏற்பாடுகளை செய்கிறார்கள். அதன்படி 2017 மே மாதம் **Dr.முரளிதர்.MD**.,(Tribal Mission) அவர்களையும்,என்னையும் அழைத்து 3 நாள் கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்தார்கள். கூட்டம் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ ஆஸ்பத்திரியில் பணிபுரியும் விசுவாசிகளும், மற்ற சுற்றுவட்டார கிராமங்களிலிருந்தும் மக்கள் கூட்டத்தில் கலந்துக்கொண்டார்கள். **Dr.செல்வின்** அவர்களும் கூட்டத்தில் கலந்துக்கொண்டார். தேவ நாமம் மகிமைப்பட்டது. Dr.முரளிதர் அவர்கள் **டிரைபல் மிஷன்** ஊழிய விவரங்களை தெளிவாக கூறி- கர்த்தருடைய செய்தியையும் பகிர்ந்துக் கொண்டார். Dr.முரளிதர் அவர்களின் முயற்சியால் தமிழ்நாட்டிலும் **டிரைபல் மிஷன் மினஷரி ஊழியம்** கொஞ்சகொஞ்சமாக கால் பதிக்க ஆரம்பித்துள்ளது. இது நல்ல முயற்சியாகும். இந்த கூட்டங்களில் கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டது.

**வாசகர்கள் கவனிக்கவும்:** மேலே பழனி CSI சபை ஜெபிக்கும் விசுவாசிகள் இணைந்து இப்படிப்பட்ட ஆவிக்குரிய கூட்டங்களை ஒரு கல்யாண மண்டபத்தை வாடகைக்கு ஏற்பாடு செய்து கல்யாண மண்டப மைதானத்தில் மாலை கூட்டங்களை நடத்தினார்கள். மற்ற சபை மக்களுக்கும் கலந்துக்கொள்ள இது நல்ல ஏற்பாடாக அமைந்தது. **பழனி நண்பர்கள் ஜெபக்குழு** போன்ற இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் ஒவ்வொரு மாவட்ட அல்லது வட்ட தலைமை ஊர்களில் இப்படிப்பட்ட பொதுகூட்ட ஏற்பாடுகள் செய்வீர்களானால் நான் தேதி கொடுக்க தயார். எந்தெந்த CSI திருமண்டலத்தில் என்னை அழைப்பதில் **பிஷப்மார்களுக்கு வெறுப்பு** அல்லது **தடையோ இருக்குமானால்** அப்படிப்பட்ட ஊர்களில் ஜெபிக்கும் சகோதரர்கள் ஒன்றுகூடி இப்படிப்பட்ட நல்ல ஏற்பாடுகள் செய்தால் வெளிப்படையாக சத்தியத்தை கூறி வேதபாடம் நடத்தலாம்.

# தலைவெட்டி பேச்சுக்காக பாபா ராம்தேவக்கு கைது வாரண்ட்:

**இந்தியாவில் யோகா** நடத்தும் **பாபர் ராம்தேவ்** என்பவர் இந்துமத தீவிரவாதி. இவர் **கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும்** வெறுக்கிறவர். **இந்தியாவில் பாரத மாதாவுக்கு ஜே** என்று கூறாதவர் யாராக இருந்தாலும் அவர்கள் **தலை வெட்டப்படும்** என்று பேசினார். இவர் பேச்சு இந்தியா முழுவதும் மத பிரச்சனைகள் எழும்ப ஆரம்பித்தது. ஆகவே அ கைதுசெய்யும்படி **நீதிபதி.ஹரீஷ்கோயால்** அவர்கள் அறிவித்தார்.



## இஸ்லாமியர்களின் அறிவிப்பு:

பாபா ராம்தேவ்வின் தலைவெட்டி பேச்சும், அவரின் தீவிர முஸ்லீம வெறுப்பும் இஸ்லாமியர்களுக்கு வெறுப்பை உண்டாக்கியது.

ஆகவே **பாபாராம்தேவ்** அவர்களின் கெமிக்கல் தயாரிப்பு தலைமுடி ஆயூர்வேத எண்ணெய், ஆயூர்வேத மருந்து கம்பெனியில் **பாதாஞ்சலி** என்ற தயாரிப்புகளை இஸ்லாமியர்கள் யாரும் வாங்கக்கூடாது என்று இஸ்லாமியர்கள் தீர்மானம் எடுத்து அறிவித்ததாக கூறப்பட்டது.

**சூரிய தெய்வத்தை யோகா மூலம்** வணங்கவேண்டும் என்ற கொள்கையை திணிக்கும் அவர் தயாரிக்கும் எந்த பொருளையும் வாங்கக்கூடாது. அதை புறகணிக்கவேண்டும் என்று அறிவித்தது அதை அவர்கள் முழு கட்டுப்பாட்டுடன் செயல்படுத்தவும் செய்தனர். உடல் சூட்டை தணிக்கும் நல்ல எண்ணெய் என்ற பெயரில் அவர் கம்பெனி வெளியிடுவது பிரபலமானது. அதை முகமதியர் யாரும் இப்போது உபயோகிப்பதில்லை.

## கிறிஸ்தவர்களும் அவர்களைப்போலவே அந்த தீர்மானம் செய்வது நல்லது:

சில வருடங்களுக்குமுன் **விக்ஸ்** போன்ற உலக பிரசித்திபெற்ற Procter & Gamble என்ற கம்பெனி பொருள்களை உலகமனைத்து கிறிஸ்தவர்கள் புறகணித்தனர்.

அந்த கம்பெனி முதலாளி இந்த பொருள்களை விற்கும் P &G கம்பெனியில் கிடைக்கும் லாபத்தில் தசமபாகமாக பெரும் தொகையை சாத்தான் ஆராதனை சபைக்கு காணிக்கையாக கொடுக்கிறேன் என்று பகிரங்க அறிவிப்பு உலக கிறிஸ்தவர்களை அதிர செய்தது.

அதன் விளைவாக அந்த கம்பெனி தயாரிக்கும் எந்த பொருளையும் எந்த கிறிஸ்தவனும் வாங்கக்கூடாது என்று எடுத்த தீர்மானத்தால் அவரின் வியாபாரம் சரிந்தது,பெருத்த நஷ்டத்துக்குள்ளானார்.

உடனே **சாத்தான் சபைக்கு** காணிக்கை ஒரு பைசாகூட அனுப்பமாட்டேன். யாரோ என் கம்பெனி பெயரை கெடுக்க செய்த சதி காரணமாக வெளியிட்ட வதந்தியாகும். மன்னிப்பு கேட்கிறேன். சாத்தான் ஆராதிக்கவோ அவனுக்கு காணிக்கை அனுப்பவே மாட்டேன் என்று உலகம் முழுவதும் அறிவித்தார்.

அதுபோல பாபா ராம்தேவ் கம்பெனி மருந்து தயாரிப்புகளை எதுவும் அவரின் ஆயூர்வேத எண்ணெய் எதுவும் வாங்குவதில்லை என்று கிறிஸ்தவர்கள் ஏகமனதாக தீர்மானம் எடுக்கவேண்டும்.

கர்த்தர் நமக்கு கிருபையாக கொடுக்கும் வருமானத்தின் பணம் விக்கிரக வணக்கத்துக்கு போகக்கூடாது என்று தீர்மானம் எடுப்பது நல்லது. இஸ்லாமியருக்கு உள்ள வைராக்கியம் கிறிஸ்தவர்களாகிய நமக்கும் இருக்கவேண்டும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# மரண அறிவிப்பு

# மாரநாதா சபை ஸ்தாபகர். Dr.Rev. ஹென்றி ஜோசப்

**மாராநாதா** சபை ஸ்தாபகர் **Rev.Dr.ஹென்றி ஜோசப்** அவர்கள் 2017 **ஏப்ரல்** மாதம் சென்னையில் கர்த்தருக்குள் நித்தியடைந்தார்கள்.




இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை புற மதத்தவர்கள் எளிதாக விளங்கிக்கொள்ளும் வகையில் மிக எளிதான உதாரணங்களாலும், சரியான வசன விளக்கங்களாலும் பிரசங்கிக்கும் அருமையான தாலந்து பெற்றவர். அவர் வானொலியில் கொடுத்த பொதுவான செய்திகள் யாவும் சிறப்பு பெற்றவையாகும்.

ஒருமுறை அவரை சந்தித்து அவரின் வானொலி செய்திகள் யாவையும் காஸட்டில் பதிவுசெய்து **சுவிசேஷ பிரதி** விநியோகிப்பதைப்போல் இலவசமாக பொதுமக்களுக்கு விநியோக்கலாம் என்ற ஆலோசனையை சென்னை கீழ்ப்பாக்கம் கார்டனில் உள்ள அவர் வீட்டுக்கு நானே நேரிடையாக சென்று பேசினேன். ஆனால் அதை என் மூலமாய் விநியோகிக்க அன்றைய சூழ்நிலையில் அவர் விரும்பவில்லை - அதற்கு காரணம் நான் **அந்நிய பாஷையைக்குறித்து** அவரிடம் கேட்ட **கேள்விகளும்** அதற்கு அவர் **தெளிவான வசன விளக்கம் கொடுக்காமல்** அதைக்குறித்து பேசுவதையே அவர் விரும்பவில்லை என்று உணர்ந்துக்கொண்டேன்.

இத்தனைக்கும் நாங்கள் **ஆரம்பகால நல்ல நண்பர்களாகும். கிராம ஊழியங்களிலும்,** தமிழ்நாட்டில் பல ஊர்களில் நடந்த **முழு இரவு ஜெபகூட்டங்களிலும், கன்வென்ஷன்களிலும்** இணைந்து ஊழியம் செய்தோம். என்மேல் அவருக்கு தனி மரியாதையும், அன்பும் உண்டு.


பின்பு அவரின் பிள்ளைகள் வளர்ந்து **மாரநாதா சபைகளின்** பொறுப்புகளை பகிர்ந்துக்கொண்டபின் அவரோடுள்ள நெருக்கம் எங்கள் இருவருக்குள்ளும் குறைந்தது.

இப்போதும் அவருடைய **ஆழமான வேத போதகமும், வேத ஆலோசனைகளும்** ஏராளமான ஆத்துமாக்களை தொட்டன. **பாஸ்டர்.ஹென்றி ஜோசப்** அவர்கள் நிறைய பாஸ்டர்களையும், ஊழியர்களையும் உருவாக்கினார். அவரின் ஊழியங்களுக்காக தேவனை துதிக்கிறேன்.

பாஸ்டர் **Rev.Dr.ஹென்றி ஜோசப்** அவர்களை இழந்த அவர் குடும்பத்தின் பிள்ளைகளுக்கும் மற்றும் சபை மக்களுக்கும் கர்த்தர் ஆறுதலை அளிப்பாராக.

# கர்த்தருக்குள் நித்தியத்துக்கு உயர்த்தப்பட்டார்

பிரபல பிரசங்கியார் திருவட்டார் **R.கிருஷ்ணன்குட்டி** அவர்கள் 2017 மார்ச் மாதம் தன் 85வது வயதில் ஊழிய ஓட்டத்தை முடித்தார். இந்து மதத்திலிருந்து இயேசுகிறிஸ்துவை சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து கர்த்தரின் ஊழியத்தை தன் வித்தியாசமான பிரசங்க தாலந்து மூலமாக **கேரளா** மாநிலமெங்கும் சபை வித்தியாசம் பாராமல் பல சபைகளில் உபயோகிக்கப்பட்டார்.




யாரையும் தயவுதாட்சண்யம் பாராமல் அவர்களின் குறைகளை பகிரங்கமாக ஜாமக்காரனைப்போல் சுட்டிக்காட்டும் நல்ல பிரசங்கியரை கேரளம் இழந்தது. இவரும் வேதவசனத்தை பாராமல், பிரசங்க குறிப்பு எழுதி வைக்காமல் மணிக்கணக்காக பிரசங்கிக்கும் தாலந்து பெற்றவர். (இவருக்கு கிடைக்கும் காணிக்கைகளை கொண்டு நான்கு ஊர்களில் சபை ஆராதனை கட்டிடத்தை கட்டிக்கொடுத்திருக்கிறார்). மிக எளிமையானவர், இவரையும் கொலை செய்ய பலமுறை முயன்றார்கள் ஆனால் கர்த்தரின் பாதுகாப்பில் அவர்கள் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டன.

இவர் பெந்தேகோஸ்தே சபை உபதேசத்தில் வளர்ந்தவர் என்றாலும் பெந்தேகோஸ்தே சபைகளில் பேசப்படும் **அந்நியபாஷை தீர்க்கதரிசனம்** என்ற பெயரில் காணப்படும் **பொய் உபதேசங்களை** கண்டு வெறுத்து இவர் **பெந்தேகோஸ்தே சபையைவிட்டு** வெளியே வந்தவராகும். ஒரே ஒருமுறை டெல்லியில் சில நிமிஷங்கள் இவரோடு பழகினேன். அவ்வளவுதான். ஆனாலும் அவர் என்னைக்குறித்தும் என் ஊழியத்தை குறித்தும் மிக நன்றாக அறிந்து வைத்திருந்தார். அதனால் என்னோடு மிக மரியாதையுடனும்,பணிவுடனும் அன்று பேசி பகிர்ந்துகொண்டார். அதிககாலம் என்னோடு பழகினவர்போல் அவர் என்னிடம் பேசியது எனக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. அவரின் ஆவிக்குரிய ஜீவியத்தைக்குறித்தும், உண்மை ஊழியத்தைக்குறித்தும் அறிந்து அவருக்காக தேவனைத்துதிக்கிறேன். அவர் ஊழியத்தில் காண்பித்த வைராக்கியத்துக்காக தெய்வத்தை துதிப்போம்.

இவர் இந்து மதத்தைப்பற்றியும்,இஸ்லாம் மதத்தைப்பற்றியும் இவர்களின் தவறான மத நம்பிக்கைகளைப்பற்றியும் மிக நன்றாக கற்றறிந்தவர். இவர் மேலே குறிப்பிட்ட இரண்டு மதங்களைப்பற்றி வெளிப்படையாக தர்க்க சவால்விட்டு அந்த மதத்தினரை தன்னோடு பேச பகிரங்கமாக அழைப்புக்கொடுத்தவர். வாக்குவாதத்தில் இவரோடு பேசியவர்கள் அனைவரும் இவர் கேள்விகளுக்கு பதில் சொல்லமுடியாமல் தோற்றுப்போனார்கள். அதனால் இரண்டு மதத்தீவிரவாதிகளும் இவர் உயிருக்கு விலை பேசினார்கள். ஏறைக்குறைய 45 மத ஆராய்ச்சி புத்தகங்களும் வேத ஆராய்ச்சி புத்தகங்களும் இன்றும் வேதாகம கல்லூரிகளில் ஆராய்ச்சி கட்டுரை தயாரிக்க பயன்படுத்துகிறார்கள்.

அதில் **இயேசு யார் இல்லை?** என்ற தலைப்பில் எழுதிய சிறு புத்தகம் மக்களால் புகழப்பட்டது. பலருடைய குருட்டு நம்பிக்கைகளை உடைத்து விழிப்புணர்வை உண்டாக்கியது. கிறிஸ்தவர்களுக்கும் தாங்கள் ஆராதிக்கும் இயேசுவை விளங்கவைத்தது. அந்த புத்தகத்தின் முடிவில் **இயேசு யார்?** என்று முழு விளக்கத்தோடு முடிப்பார். இப்படிப்பட்டவரின் பிரசங்கங்களை நான் நேரில் கேட்கவும், அவரோடு பழகவும் இயலாமல்போனதே என்று எனக்கு ஒரு குறை உண்டு.

நான் கேரளத்தில் ஒருபக்கம் பேசும்போது **கிருஷ்ணன்குட்டி** அவர்கள் கேரளத்தில் வேறு ஒரு இடத்தில் பேசிக்கொண்டிருப்பார். ஆகவேதான் அவர் பிரசங்கத்தை கேட்க முடியவில்லை. ஒருமுறை **கேஸட்டில்** அவர் பிரசங்கத்தை கேட்டேன். இப்படிப்பட்ட ஊழியரின் இழப்பு கிறிஸ்தவ உலகில் பெரும் நஷ்டமாகும்.

**சகோ.கிருஷ்ணன்குட்டி அவர்களின் புத்தகங்களோ, (CD)சிடியோ இதை வாசிக்கும் உங்களிடம் இருக்குமானால் எனக்கு அனுப்பி வைக்கவும்.**

கேரளத்தில் **கோலஞ்சேரி** ஆஸ்பத்திரியில் அவர் மரணப்படுக்கையில் படுத்திருந்த போதும் **இந்துமத பிரமானிகள்** அவர் மனம் வேதனைப்படும்அளவு வார்த்தைகளினால் துன்புறுத்தியதாக பத்திரிக்கை செய்தி கூறுகிறது.

திரு.**கிருஷ்ணன்குட்டி** அவர்களின் மனைவி, திருமணமான இரண்டு பிள்ளைகள் அவருக்கு காணிக்கை கொடுத்து அவரை தாங்கிய உண்மை விசுவாசிகள் யாவருக்கும் கர்த்தர் ஆறுதல் அளிப்பாராக.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## விலாசம் புதுபித்தல்:

**ஜாமக்காரன் புதிய விலாச பட்டியல்** ஏறக்குறைய முழுவதுமாக தயாரிக்கப்பட்டு விட்டது. விலாசம் புதுப்பிக்கும் கார்டை அல்லது ஜாமக்காரன் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் கடிதங்களை வைத்து **புது விலாச பட்டியல்** தயாரித்துள்ளோம்.

பழைய வாசகர்களை நாங்கள் இழக்க விரும்பவில்லை. இரண்டுமுறை ஜாமக்காரன் மூலம் விலாசம் புதுப்பித்தல், ஞாபகமூட்டல் அறிவிப்பை எழுதியும் சிலர் கவனிக்கவில்லை. ஆனால் இவர்களெல்லாம் இப்போது மிக தாமதமாக ஒவ்வொருநாளும் நாங்கள் அறிவிப்பை கவனிக்கவில்லை என்றும், எங்கள் விலாசத்தை மறுபடியும் சேர்க்கவேண்டும் என்றும், ஏராளமானவர்கள் எங்களுக்கு எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் பெயர்களை நாங்கள் புதிய விலாச பட்டியலில் உள்ள **புதிய அங்கத்தினர் விலாசப்பட்டியலில் இணைத்து** அவர்களுக்கு ஜாமக்காரனை அனுப்ப ஆரம்பித்துவிட்டோம்.

புதிதாக யாராவது ஜாமக்காரன் தங்களுக்கும் வேண்டும் என்று விரும்பினால், உங்கள் முழு விலாசத்தையும் எங்களுக்கு எழுதி விண்ணப்பித்தால் உடனே விலாசப்பட்டியலில் நேரிடையாக **அவர்கள் விலாசத்தை** இணைத்துக்கொள்வோம். எங்கள் வாசகர் குடும்பத்தில் ஒருவராக அவர்களை இணைத்துக்கொள்வதில் நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர்களுக்காக ஜெபிப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

புதிய விலாசப்பட்டியலுக்கு நாங்கள் கேட்டுக்கொண்டப்படி அவரவர்களின் விலாசங்களை எங்களுக்கு எழுதியும், பழைய விலாசத்திலுள்ள தவறுகளையும் குறிப்பிட்டு, தெளிவாக எங்களுக்கு கடிதம்,இமெயில் மூலமாக எழுதி இந்த புது விலாசப்பட்டியலை தயாரிக்க எங்களோடு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**புதிய விலாசத்துடன்** இனி எங்களோடு தொடர்புக்கொள்ளவும், மறக்காமல் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் **கணணி எண்ணையும்** எழுதவும்.

**- (ஜாமக்காரனுக்கு சந்தா ஏதும் இல்லை).**

## FMPBயின் 50 வருட மிஷனரி ஊழிய ஸ்தோத்திர கூட்டங்கள்:

# பெரியமலை ஊழியம்:

FMPB 1967ம் வருடம் 9ம் தேதி முதல் மிஷனரிகளை **பெரியமலை** அடிவாரத்தில் வைத்து பிரதிஷ்டை செய்து அனுப்பி வைத்த நாளை நன்றியுடன் நினைவுகூறும் விதமாக 2017 ஜீன் 9ம் தேதி ஒரு **ஸ்தோத்திர கூடுகை பெரியமலையில்** வைத்து நடத்தினர்.

இப்படி அற்பமாய் ஆரம்பிக்கப்பட்ட **FMPB மிஷனரி ஊழியம்** ஆலமரமாய் வளர்ந்து ஆசியாவிலேயே மிக அதிக மிஷனரிகளை ஆயிரகணக்கில் வட இந்தியாவுக்கு அனுப்பி காடுகளிலும்,கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவித்து ஆயிரக்கணக்கான சபைகளை ஸ்தாபித்த சிறப்பான பெருமை FMPBக்கு உண்டு.

FMPB மிஷனரி ஸ்தாபனத்தையும் FMPBயில் உள்ள அனைத்து மிஷனரிகளையும்,மிஷனரிகள் ஸ்தாபித்த அந்தந்த மாநில சபை மக்களையும், ஜாமக்காரன் வாசகர்களோடு **ஜாமக்காரனும்** தன் வாழ்த்துக்களை பதிவுசெய்கிறது. கர்த்தர் தொடர்ந்து FMPB மிஷனரி ஸ்தாபனத்தை ஆசீர்வதிப்பாராக.

**JUNE 2017**

# Printed Book

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.